ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2492/06 - 2026 ජූනි මස 08 වැනි සඳුදා - 2026.06.08

2492/06 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி.6/2001 (iv)

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 80 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
இலங்கை காப்புறுதி
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

கொழும்பு,
2026. 06.05.

விதிகள்

2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் 9 ஆம் தேதிய 2401/12 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் காப்புறுதித் தரகரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கான மேலதிக தேவைப்பாடுகள் பற்றிய விதிகள், அதன் 3 ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"3.மீள்காப்புறுதித் தரகுத்தொழிலை கொண்டு நடாத்துவதற்கு சட்டத்தின் கீழ் தரகரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கு விரும்புகின்ற எவரேனும் ஆள், ஆகக்குறைந்தது பின்வரும் எவ்வாள் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முதன்மை அலுவலரொருவரின் நியமனத்தின்மீது விதிக்கப்பட்ட வேறு எவையேனும்

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

தேவைப்பாடுகளுக்மைய, அத்தகைய தரகுத்தொழில் கம்பெனியின் முதன்மை அலுவலர் பதவி உள்ளடங்கலாகச் சிரேஸ்ட முகாமைத்துவ பதவியொன்றை வகித்தல் வேண்டுமோ அவ்வாள் ஒருவரையேனும் தொழிலுக்கமர்த்தியிருத்தல் வேண்டும் -

(அ) பட்டயம் பெற்ற காப்புறுதி நிறுவகத்தின் இணையுறுப்பினராக (ACII) அல்லது இந்திய காப்புறுதி நிறுவகத்தின் இணையுறுப்பினராக (AIII) தகைமையைக் கொண்டிருத்தல் அல்லது மீள் காப்புறுதித் திணைக்களமொன்றில் குறைந்தது மூன்று வருட அனுபவமுடைய காப்புறுதிக் கம்பெனியில் அல்லது காப்புறுதித் தரகுக் கம்பெனியில் காப்புறுதித் துறையில் ஐந்து வருட பின் அனுபவத் தகைமையுடன் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளத்தக்க தகைமையொன்றைக் கொண்டிருத்தல்; அல்லது

(ஆ) எம் மீள் காப்புறுதித்துறை முகாமைத்துவஞ்சார் மட்டத்தில் குறைந்தது இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டுள்ளதோ அம்மீள் காப்புறுதித்துறையில் பத்து வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

ECG 06 - 0061